

# எண்ணத் தூரிகைகள்

கேஷவ் வெங்கடராகவன்

**‘‘ஒரு ஓவியன், ஆகாயத்திலிருந்து, பூமியிலிருந்து, ஒரு சிறிய காகிதத்திலிருந்து, கடந்து செல்லும் வடிவத்திலிருந்து, சிலந்திக்கூட்டிலிருந்து- அனைத்து இடங்களிலிருந்தும்- வரும் உணர்வுகளின் அடித்தடம்‘‘.**

பிக்காஸோவின் இந்த வார்த்தைகளின் சாரம், வெப்பம் தலையைப் பிளக்கும் மே மாதத்தில் ஒரு மதியத்தில், இரண்டு மணி நேரம் நீடித்த அந்த சந்திப்பின்பொழுது எனக்குப் புரிந்தது. சிறு வயது முதலே 'ஹிந்து’வில் அவரது கார்ட்டூன்களைப் பார்த்து பழக்கப்பட்டிருந்ததால், ஆழ் மனதில் அவரைப் பற்றிய படிமம் அவரை சந்திப்பதற்கு முன்னமே படிந்திருந்தது. அவரை சந்தித்த பிறகு, அவரது பன்முகத்திறனும், உலக நடப்புகளைப் பற்றிய அவரது ஆழ்ந்த சிந்தனையும் கருத்துகளும் எனக்குப் புலப்பட்டன. அடக்கம், பணிவும் இவைகளைப் போர்த்தியிருப்பது சிறப்புக்குரிய விஷயம்.

அறையின் ஒரு மூலையில் அமர்ந்து, கையில் வரைகோல் ஏந்தி மேஜையின் முன்னால் சாய்ந்தபடி, ஒரு மாயம் நேரிடையாக நிகழும்பொழுது - கார்ட்டூன் ஒரு கருத்தாழமிக்க செயல் என்று உணர முடிகிறது.

‘கேஷவ்’ என்று ‘ஹிந்து’ படிக்கும் அனைவராலும் அறியப்படும் இவர், ஒரு ஆசாரமான குடும்பத்தில் பிறந்து, மார்கழி மாத பஜனைகளில் வளர்ந்தவர். உள்ளே மறைந்து இருக்கும் ‘கிருஷ்ணா உணர்விற்கு’ இதுவே ஒரு பெரிய காரணமாக இருக்கக்கூடும். பெங்களூரில் பிறந்த இவர், பள்ளிப்படிப்பை ஹைதராபாதில் படித்தார். தினசரி வாழ்வில் காணப்படும் பல நிகழ்வுகளை, கரிக்கோலால் (pencil) சுவற்றிலேயோ அல்லது சுண்ண எழுதுகோலால் (chalk piece) தரையிலோ வரையும் வழக்கம் சிறுவயதிலேயே தொடங்கியது.

சென்னைக்கு வந்து பட்டப்படிப்பை முடித்து, பட்டயர் கணக்கர் (chartered accountancy) படிப்பில் பயிற்சியையும் (articleship) முடித்து, ஒரு வங்கியில் வேலையில் அமர்ந்தார். அதே சமயத்தில், ‘ஆனந்த விகடன்’ பத்திரிகைக்குக் கார்ட்டூன்களையும் வழங்கி வந்தார். 1986ஆம் ஆண்டு ‘ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ நடத்திய கார்ட்டூன் போட்டியின்பொழுது கிடைத்த அங்கீகாரம், ஊக்கம், ‘ஹிந்து’விற்கு வரைந்த சில மாதிரிகளை அனுப்பக் காரணமாக



இருந்தன. அந்த ‘மாதிரிகள்’ சுவாரஸ்யமாக இருக்கவே, ‘ஹிந்து’ அவருக்கு அழைப்பு விடுக்க, வங்கி வேலையை ராஜினாமா செய்துவிட்டு, ‘ஹிந்து’ வில் முழுநேர கார்ட்டூனிஸ்டாக 1987ஆம் ஆண்டு சேர்ந்தார்.

‘எல்லா குழந்தைகளுக்கும் வரைய வரும் என்றாலும், உள்ளார்ந்த இயல்பான ஆர்வத்தை வளர்த்து, இடைவிடாத பயிற்சியின் மூலம் செம்மைபடுத்த வேண்டும். மேலும் ‘கூர்ந்த கவனம்’ ஒரு ஓவியனுக்கு அத்தியாவசமாகிறது. நினைவிலிருந்து வரைதலே, பார்த்து வரைவதை விட சிறந்தது’ என்கிறார் இவர்.

செய்திகளை தொலைக்காட்சிகளிலும், இணையதளத்திலும் தினம் பார்ப்பதன்மூலம், நாட்டுநடப்புகளைப் பற்றிய கருத்துகளை தனக்குள்ளே உருவாக்கிக் கொள்கிறார். இணையத்தின் வளர்ச்சியினால், செய்திகளை சேகரிக்கும் வேலை இப்பொழுது இலகுவாகிறது. இணையத்தின் வருகைக்கு முன்னால், பத்திரிகைகள், உள்நாட்டு/வெளிநாட்டு செய்தித்தாள்கள் படிப்பது, தொலைக்காட்சி செய்திகள் பார்ப்பது, தன்னை சுற்றி நிகழும் நிகழ்வுகளை கூர்ந்து கவனிப்பது- அரை நாள் இவற்றில் செலவழியும்.

ஒரு நாளின் மனோநிலையை (mood) நாம் உணர்ந்து அதன்படி நடக்க வேண்டுமே ஒழிய, ஒரு பத்திரிகையாசிரியரோ, செய்தித்தாள் ஆசிரியரோ அன்றைய கார்ட்டூன் என்ன இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்க முடியாது. ‘வடிப்பு’ (idea) எதுவும் வராமல் இருப்பதுதான் ஒரு ஓவியனுக்கு நிகழக்கூடிய மிக மோசமான நிலை. ‘பெரும்பாலும் தினம் நிகழ்ந்து ஒரு பெரிய சவாலைத் தருவதுதான் வரைகலை’ என்கிறார் கேஷவ். தொடர்ந்து, ‘நாம் என்ன கூற வருகிறோமோ அது மிகக் குறைந்த அவகாசத்திற்குள் படிப்பவரின்/பார்ப்பவரின்



மனதைச் சென்றடைவதால், இந்த சவாலை ஏற்று செயல்படுவது நல்ல பலனைக் கண்டிப்பாக அளிக்கும். கார்ட்டூன் வரைவது 20-30 நிமிடங்களில் முடிந்து விடும் என்றாலும் பெரும்பாலான நேரம் 'யோசிப்பதில்' கழிந்து விடும்' என்கிறார்.

அவரது வீட்டை சுற்றிப் பார்த்தால், அவரது பெரும்பாலான ஓவியங்களின் பிரதான பொருள் 'கிருஷ்ணா' என்று நமக்கு பளிச்சென்று புலப்படும். சமூக வலைதளங்களிலும் (social media)காணப்படும் அவரது ஆக்கங்கள் 'கிருஷ்ணா' வைச் சார்ந்தோ. சுற்றியோ இருக்கிறது. கிருஷ்ணாவின் மேல் ஏன் இந்த அளவுகடந்த உரிமை? ஆர்வம் மேலிட அவரைக் கேட்கிறேன். ஒரு ஆழ்ந்த மூச்சை இழுத்து, முகத்தில் அவருக்கே உரித்தான புன்னகையுடன் அவர் கூறியது- ''என்னைப் பொருத்தவரை சுதந்திரம், பரிவு, அனைத்து உயிர்களின் மீது அன்பு செலுத்துதல், அமைதி-இவைகளின் பிரதிநிதி 'கிருஷ்ணா'. அமெரிக்காவின்

**''என்னைப் பொருத்தவரை சுதந்திரம், பரிவு, அனைத்து உயிர்களின் மீது அன்பு செலுத்துதல், அமைதி-இவைகளின் பிரதிநிதி 'கிருஷ்ணா'**

'சுதந்திர சிலை' (statue of liberty) போல, கிருஷ்ணாவை- நிற்கும் விதம், முகத்தில் காணப்படும் அமைதியான பேரின்பம், இசை- வேதங்கள் தன்னுரிமையின் குறியீடாகக் காண்பித்திருக்கின்றன. வேதாந்தம், தத்துவம், புராண இலக்கியம் என்று நிறைய படித்தபின்னர், 'கிருஷ்ணா' என்பது ஒரு அறுதியிடலாகவே (fixation) ஆகி விட்ட இவருக்கு அதுவே மாறாமல் நிலைத்துவிட, 'கிருஷ்ணா'வைச் சுற்றியே பரீக்ஷார்த்தங்கள் செய்ய ஆரம்பித்தார்.

'சமூக வலைதளங்கள்' (social media) தரும் சுதந்திரத்தினாலும், தமக்குத் தோன்றியவற்றை வரைய முடிவதனாலும், நேரிடையான கருத்துக்களை மக்களிடமிருந்து கேட்கும் வாய்ப்பு இருப்பதனாலும், அவற்றை ஆர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளார் இவர். கையில் கரிக்கோல் பிடித்து வரைவதையே விரும்பினாலும், காலத்துக்கேற்றபடி தொழில் நுட்பத்தை எல்லோரும் பயன்படுத்த வேண்டும் என்று நம்பும் இவர், வண்ணம் தீட்டும் முறைக்கு எண்ணியல் கருவிகளை (digital tools) உபயோகிக்கிறார். எண்ணியல் ஓவியங்களுக்கும் (digital arts) ஓவியர்களுக்கும் வாய்ப்புகள் அதிகரித்து வருவதை-நமது நாட்டில் இன்னும் இவை வளரவேண்டும் என்றாலும் - நினைத்து மகிழ்ச்சியடையவும் இவர், 'மக்கள் செய்தி என்ன என்றுதான் கவனிக்கிறார்களேயொழிய, எங்கு சொல்லப்படுகிறது என்று கவனிப்பதில்லை' என்று கூறுகிறார்.

எனது அடுத்த கேள்வியை எதிர்பார்த்ததுபோல் இருந்தது அவர் தொடர்ந்து கூறிய வாக்கியம்- 'எனது கிருஷ்ணாவிற்கு மதம் கிடையாது!!'

மாலி, கோபுலு, ராஜு, லக்ஷ்மண், டேவிட் லோ போன்ற பல ஓவியர்கள்/கார்ட்டூனிஸ்ட்கள் தமது உள்ளுயிர்ப்பு (inspiration) என்று கருதுகிறார் இவர். 'ஹிந்து' பத்திரிகையும், அதன் வெவ்வேறு ஆசிரியர்களும் தமக்கு வாழ்க்கையையும், நிறைய விஷயங்கள் கற்றுத் தந்ததையும் கூறும் இவர், எந்த காரணம் கொண்டும், 'ஹிந்து' தனது பார்வையை அவர் மேல் திணித்ததில்லை என்றும் பெருமிதத்துடன் கூறுகிறார்.

கார்ட்டூனுக்கும், ஓவியத்திற்கும் உள்ள வேறுபாட்டை கேஷவ் விளக்குகிறார். 'கார்ட்டூன்' என்பதே சரியாகப் புரிந்துகொள்ளப்படாத ஒரு வார்த்தை என்று கூறும் கேஷவ், 'கார்ட்டூன்' என்றவுடனே பிறரைக் கிண்டல் செய்வது அல்லது இழிவுபடுத்துவது அல்லது அரசை எதிர்ப்பது என்று பலரால் தவறாகக் கருதப்படுகிறது. மக்களின் கோபம் எவ்வாறு நகைச்சுவையாக மாறி, கோபத்தின் அடுத்த கட்டத்திற்குச் செல்வதை விளக்குகிறார் அவர்.

ஒரு ஓவியனுக்குத் தேவை சுதந்திரம் என்று கருதும் இவர் அதே சமயத்தில் அந்த சுதந்திரம், ஒருவித வக்ரத்தன்மையாக ஆகக்கூடாது என்கிறார். மேலும், ஓவியனை அவனது அனைத்து படைப்புகளை வைத்து மதிப்பிட வேண்டுமேயொழிய, ஓரிரு ஓவியங்களை வைத்து மதிப்பிடக் கூடாது என்று நினைக்கிறார். சில ஓவியக் கண்காட்சிகளை நடத்தியிருக்கும் இவர், அவை தனது நேரத்தில் பெரும்பகுதியை எடுத்திருந்தாலும், நல்ல அனுபவத்தை அளித்திருப்பதை மறுக்கவில்லை. இங்குகூட, அவை 'கிருஷ்ணா'வை- அதன் செய்தியை, இசையை, நடனத்தை- சுற்றியே அமைந்திருக்கின்றன. இவருக்கு உள்ளுயிர்ப்பு தருவது இசை. 'பாவம்' (bhavam) என்பது இசை, நாட்டியம், சிற்பக்கலை இவற்றிற்கு எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று ஓவியத்திற்கும்தான் என்கிறார் இவர். இந்தியாவில், முழுநேர கார்ட்டூனிஸ்டாவதற்கு தேவை- கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, இடைவிடாது கற்றுக்கொள்ளுதல், வாழ்க்கையையும் இயற்கையையும் நன்கு கவனித்தல், தொடர்ந்த பயிற்சி, நிறைய படித்தல், அளவிலா பொறுமை. தென்னாட்டில் கார்ட்டூன்கள் அதிகமாக பாராட்டப்பட்டாலும், 12-15 வருடங்களாவது காத்திருக்கவேண்டி இருப்பதால், பண வரவு என்பது பலகாலம் கழித்துத்தான் நிகழும்.

10-15 நொடிகளே நாம் பார்க்கும் கார்ட்டூன்களுக்குப் பின்னால் இருக்கும் அசாத்திய உழைப்பும், 'நமது கலாசாரத்தின் வேர்களை போஷிப்பவை கலைகள் என்றால், சதாயம் கலைஞனின் போக்கில், அவன் பார்வையில் அவனை சுதந்திரமாக விட வேண்டும்' என்பதும் கேஷவுடன் உரையாடும்பொழுது நமக்குப் புரிகிறது. கார்ட்டூன்களைப் பற்றியும், ஓவியங்களைப் பற்றியும் மட்டும் பேசாமல், பல விஷயங்களைப் பற்றி அலசி, நமக்குப் பல விஷயங்களை உணர வைக்கிறார். இந்த ஒரு பண்புதான், சில கலைஞர்களை மட்டும் நமக்கு வித்தியாசப்படுத்திக்காட்டி, அவர்களை பலருக்கும் உள்ளுயிர்ப்பாக்குகிறது போலும்.

மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளை தட்டி எழுப்பி-அதே சமயத்தில் தேவையில்லாமல் எதையும் தூண்டாமல்-அவர்களது எண்ணங்களை நகைச்சுவை கலந்து, காட்சி வடிவில் எதிரொலிக்க வைக்கும் கேஷவ், சென்னையின் முதன்மை சான்ற வெற்றி வீரர்!